www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V11T

[illegible] பொதுத் தேர்வுகள்

முதல் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 11

பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிக்கவும்

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**14×1=14**

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1) மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

2) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) ஏதிலிக்குருவிகள் - மரபுக்கவிதை ஆ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

இ) திருமலைமுருகன் பள்ளு - சிறுகதை ஈ) யானைடாக்டர் - குறும்புதினம்

3) கூற்று - 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி

இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு விளக்கமும் தவறு

4) ஒப்புரவு என்பதன் பொருள் ............

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது

இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

5) 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றினை ஆ) குறுந்தொகை

இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

6) நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய்முன் நேர் ஆ) காய்முன்நிரை

இ) கனிமுன் நிரை ஈ) மாமுன் நேர்

7) கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

| | |
|---|---|
| i) விரியன் | - 1) தண்டை |
| ii) திருகுமுருகு | - 2) காலாழி |
| iii) நாங்கூழ்ப்புழு | - 3) சிலம்பு |
| iv) குண்டலப்பூச்சி | - 4) பாடகம் |

அ) 3 4 2 1 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

8) அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

9) தமிழின் முதல் பாவடிவ நாடக நூல்

அ) இரகசிய வழி

ஆ) மனோன்மணீயம்

இ) நூல் தொகை விளக்கம்

ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

10) உறுபகை - இலக்கணக்குறிப்பு எழுதுக.

அ) வினைத்தொகை

ஆ) உரிச்சொல்தொடர்

இ) பண்புத்தொகை

ஈ) உம்மைத்தொகை

11) Gazette- கலைச்சொல் தருக.

அ) பிழை ஆ) அரசிதழ் இ) அனுப்புகை ஈ) மானியம்

12) உலகச் சிட்டுக்குருவிகள் நாள்

அ) மார்ச் - 22 ஆ) மார்ச் - 20 இ) ஏப்ரல் - 22 ஈ) ஏப்ரல் - 20

13) 'உண்டால் அம்ம இவ்வுலகம்' - என்னும் பாடலில் பயின்று வந்துள்ள திணை

அ) பொதுவியல் திணை

ஆ) பாடாண் திணை

இ) வாகைத் திணை

ஈ) குறிஞ்சித் திணை

14) 'பிச்சி' கதாப்பாத்திரம் இடம்பெறும் குறும்புதினம்

அ) ஆறாம் திணை

ஆ) யானை டாக்டர்

இ) வாடிவாசல்

ஈ) பிம்பம்

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×2=6

15) 'வளருங் காவில் முகில்தொகை ஏறும்' - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

16) காவடிச்சிந்து என்பது யாது?

17) எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

18) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4

19) பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

20) சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

21) நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14

22) பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

23) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) பொதுச் சிறப்பு ஆ) உழுதுழுது

24) ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.

அ) வேண்டுகின்றேன் ஆ) பிரிந்தோர்

25) தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

நேற்று என் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?

26) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

குரை, குறை

27) வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

V11T

சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப்புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

28) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

நஞ்சிருக்கும்.

29) **விடைக்கேற்ற வினாவை எழுதுக.**

திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப்.

30) **கலைச்சொல் எழுதுக.**

அ) Globalisation ஆ) Cultural Elements

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31) நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

32) உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

33) மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

34) உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள்விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

36) ஃபிரெஸ்கோ ஓவியங்கள் ; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

37) ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

38) 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39) வேற்றுமை அணி (அல்லது) பிறிதுமொழிதல் அணியை விளக்குக.

40) பொதுவியல் திணை அல்லது பொருண்மொழிக் காஞ்சித்துறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

41) **இலக்கியநயம் பாராட்டுக. மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எழுதுக.**

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ.

- கம்பர்

42) 'பேசு' என்ற வேர்ச்சொல்லைப் பயன்படுத்தி வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், வினையாலனையும் பெயர்த்தொடர் ஆகியவற்றை உருவாக்குக.

43) **தமிழாக்கம் தருக.**

1. The pen is mightier than the sword.
2. Knowledge rules the world.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



3. An eye for an eye only ends up making the whole world blind.
4. Roads were made for journeys not destinations.

43) காது கேளாதாவர்களுக்கான மாற்று வினா:-

செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு.போப், 1839 ஆம் ஆண்டில், தென்னிந்தியாவிற்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத் தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை. போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் செய்த பெரியார் ஜி.யு.போப் ஆவார்.

**மேற்காணும் பத்தியைப் படித்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

1. ஜி.யு.போப் தென்னிந்தியாவுக்கு எப்பொழுது வந்தார்?
2. ஜி.யு.போப் முதன்முதலாகத் தமிழ் உரையைச் சொற்பொழிவாற்றிய இடம் எது?
3. ஜி.யு.போப் திருக்குறளையும், திருவாசகத்தையும் எந்த மொழியில் மொழி பெயர்த்தார்?
4. ஜி.யு.போப் எந்த ஊரில் வாழ்ந்த போது தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார்?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3×6=18**

44) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்கவும்.

**(அல்லது)**

பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

46) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதிகொண்டு தொகுத்தெழுதுக.

47) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. **4+2=6**

அ) 'நான் என்பாய்' எனத் தொடங்கும் தொலைந்து போனவர்கள் பாடலை எழுதுக.

ஆ) 'செயல்' என முடியும் குறளை எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com